# கடைசிகால தீர்க்கதரிசனங்கள்

# 7



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

ஆனால் மகத்தான அற்புதங்களை எதிர்பார்க்காதீர்கள். மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைத்தல் போன்றவைகளை. அது யூதர்களுக்கு செல்லவிருக்கிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

**Q.375. மணவாட்டி இங்கிருந்து புறப்படுவதற்கு முன்பு பரிசுத்த ஆவியின் அசைவு இருந்து, அவளால் அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்படுமா? அல்லது அவருடைய பிரத்தியட்சமாகுதலுக்காக மட்டும் நாம் காத்திருக்கிறோமா?**

*310. இந்தக் கேள்வியுடன் நான் முடித்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். ஏனெனில் பதில் சொல்வதற்கு இன்னும் அநேக கேள்விகள் உள்ளன. அதிக நேரமாகிவிட்டது. இப்பொழுது நேரம் ஒரு மணிக்கு இருபது நிமிடங்கள். இங்கு இன்னும்*

முப்பது அல்லது ஒருவேளை நாற்பது கேள்விகள் கேட்கக்கூடும். எனக்கு உள்ள நேரத்தில் நான் இதற்கு சிறந்த முறையில் பதிலளிக்கிறேன். நான் மூன்று நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறேன். மற்ற கேள்விகளை என்னால் முடியும் போது எடுத்துக்கொள்கிறேன். பாருங்கள்? எப் பொழுது இவைகளை எடுத்துக்கொள்ள முடியுமென்று எனக்குத் தெரியவில்லை. என்னால் முடிந்தவரையில் அதை சிறப் பாக செய்வேன். நீங்கள் இவைகளை அனுபவித்து மகிழ்கின்றீர்களா? நான்... அது எனக்கும் உதவியாயுள்ளது. பாருங் கள்? இங்கு வந்து இக்கேள்விகளை முன்பு காணாமல் பொறுக்கி எடுக்கும் போது (பாருங்கள்?), உங்களால் பதில் கூற இயலாத சில கேள்விகள் கிடைத்து விடுகின்றன. நான் நம்பியிருந்தேன். நான் பொறுக்குவேன் என்று... சர்ப்பத்

*தின் வித்தைக் குறித்த ஒரு கேள்வி இங்குள்ளது என்று எனக்குத் தெரியும். அதை எப்படியாவது பொறுக்கி எடுத்து அதை விவரிக்க வேண்டுமென்று விரும்பினேன். பாருங்கள்? அதை எடுக்கத் தவறிவிட்டேன், எனவே நான்... ஒருக்கால் அதை அந்த விதமாக செய்வது கர்த்தருக்குப் பிரியமில்லை போலும், அது சர்ப்பத்தின் வித்தின் பேரில், இந்த ஒலிநாடாவைக் கேட்கிறவர்கள் ஒருக்கால், "நல்லது, அவர் அதற்கு பதில் கூறாமல் விட்டு விட்டார்" என்று சொல்லாதபடிக்கு, அதற்காக எத்தனை பேர் இன்னும் இரண்டு நிமிடங்கள் சகித்துக் கொள்வீர்கள்? சரி.*

***311.*** *இப்பொழுது பொறுங்கள், இதற்கு முதலாவதாக நான் பதில் கூறட்டும்.*

இங்குள்ள கேள்வி இது: "மண வாட்டியினால் அற்புதங்கள் செய்யப் படுமா?"

ஆம், ஐயா. அது இப்பொழுது செய்யப்பட்டு வருகிறது. அது உண்மை. பாருங்கள்?

ஆனால் மகத்தான அற்புதங்களை எதிர்பார்க்காதீர்கள். மழை பெய்யாத படிக்கு வானத்தை அடைத்தல் போன் றவைகளை. அது யூதர்களுக்கு செல்ல விருக்கிறது. பாருங்கள்?

அது இங்கு சம்பந்தப்பட்டதல்ல; அது மோசேயும் எலியாவும் யூதர்களிடம் செல்லுதல், அது இந்த சபைக்கு அல்லவே அல்ல.

*நீங்கள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் முதல் மூன்று அதிகாரங் களைப் படியுங்கள். சபை என்னவென்று அங்கு புரிந்து கொள்வீர்கள். சபைக்கு அவ்வளவுதான். அது மணவாட்டியுடன் திரும்ப வரும்போது, அவள் திரும்ப வரும்போது... படியுங்கள்... சபையைக் குறித்து நீங்கள் அறியவேண்டுமானால், அதனுடன் சம்பந்தப்பட்டுள்ளது எது வென்று, வெளிப்படுத்தின விசேஷம் முதல் மூன்று அதிகாரங்களைப் படித்து விட்டு, அங்கிருந்து 19ம் அதிகாரத்துக்கு சென்று அதிலிருந்து தொடங்கி படியுங் கள், அங்கு நீங்கள் மணவாட்டியை காணலாம். மற்றது யூதரைக் குறித்தது.*

# நாம் கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்க மட்டும் செய்ய வேண்டும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #19

*198.* நாம் கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்க மட்டும் செய்ய வேண்டும்.

காத்திருக்க மட்டும் செய்யுங்கள்; உங்கள் தீவட்டிகளை சுத்தம் பண்ணி வைத்திருங்கள், அதை எண்ணெயினால் முழுவதும் நிரப்புங் கள்.

ஒவ்வொரு மணி நேரமும் ஜெபித்துக் கொண்டிருங்கள், ஒவ்வொரு நாளும் அல்ல, ஒவ்வொரு மணி நேரமும்.

உங்களை ஆயத்தமாக வைத்திருங்கள்; ஆயத்தமாயிருங்கள்: இனிமையாயிருங்கள், விழித்துக் காத்திருங்கள்...

# செய்தி: 64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #19

*Q.253.* **மணவாட்டிக்கு - இயேசு வருவதற்கு முன்பு மணவாட்டி, பின்மாரி காலத்திலிருந்தது போல, அற்புதங்களைச் செய்வதற்கும், மரித்தோரை உயிரோடெழுப்புவதற்கும் மற்றவைகளைச் செய்வதற்கும் பரிசுத்த ஆவியின் அனைத்து வல்லமையையும் பெற்றிருப்பாளா? அல்லது இந்த பின்மாரி 144,000 யூதர்களுக்கு மாத்திரமா? எல்லா ஊழியக்காரர்களும் இதைப் பெற்றிருப்பார்களா, அல்லது அவருடைய வருகைக்காக மட்டும் நாம் காத்திருக்கிறோமா?**

*187. ஆம். பாருங்கள், நண்பனே. நான் ஒரு வேதசாஸ்திர பண்டிதன் அல்ல. எனவே வேதத்தைக் குறித்து எனக்குத் தெரிந்த*

*அனைத்தையும் நான் நிழல்களையும் முன்ன டையாளங்களையும் கொண்டு போதிக்க வேண்டியவனாயிருக்கிறேன். நீங்கள் என்னை. "முன்னடையாளக்காரன்" (typologist) என்று அழைக்கலாம். நான் சுவற்றை நோக்கிக் கொண்டிருக்கிறேன், என்னை நான் கண்ட தேயில்லை என்று வைத்துக் கொள்வோம். நான் சுவற்றில் என் நிழலைக் காணும்போது, எனக்குத் தலை, காதுகள், கைகள் உள்ளதாக அறிந்து, என்னை நான் கண்டால், நான் எப்படியிருப்பேன் என்பதை அறிந்து கொள் கிறேன். பாருங்கள்? ஒரு கண்ணாடியில் என் உருவம் பிரதிபலிப்பதை நான் காணும் போது, நான் நின்று கொண்டு என்னையே நான் காணமுடிந்தால் எப்படியிருப்பேன் என் பதை அறிந்து கொள்கிறேன்.*

*188. வேதத்தையும் நான் அவ்விதமாகவே கருதுகிறேன். "இவையனைத்தும் நமக்கு திருஷ்டாந்தங்களாக வைக்கப்பட்டுள்ளன" என்று வேதம் உரைக்கிறது (1 கொரி. 10:11).*

*நாம் பின்னோக்கிப் பார்த்து, சந்திரன் சூரியனைப் பிரதிபலிப்பது போல, அது என்னவென்று நாம் அறிந்து கொள்ளலாம். நான் சூரியனைக் கண்டதேயில்லை என்றால், அது எப்படியிருக்கும் என்று நாம் அறிந்துகொள்கிறோம். நாம் சந்திரனை நோக்கி, சூரியன் அதைக் காட்டிலும் பெரிதாயிருக்கும் என்று அறிகிறோம். நல்லது, அது போன்று பழைய ஏற்பாட்டின் சம்பவங்களை நீங்கள் காணும் போது, அவை புதிய ஏற்பாட்டின் சம்பவங்களைப் பிரதிபலிப்பதாயுள்ளன.*

***189.*** *இப்பொழுது, இங்கே, என் முழு இருதயத்தோடும் நான் விசுவாசிப்பது என்னவெனில், நான் - நாம், அல்லது இந்த நாட்கள்... நாம் இல்லையென்றால், வேறு யாரோ இருக்கிறார்; அப்படித்தான் இருக்க வேண்டும். காலம் முடிவடைந்து விட்டது; நாம் முடிவில் இருக்கிறோம்.*

***190.*** *ஒவ்வொன்றும். உலகமானது... தேவன் உலகத்தை ஆறாயிரம் ஆண்டுகளில்*

சிருஷ்டித்து, ஏழாயிரம் ஆண்டில் ஓய்ந்திருந்தார். ஒரு மனிதன் அத்தனை ஆண்டுகளாக உயிர் வாழ மாட்டான் என்று அவர் கூறினார். "நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்'. வேதத்தின்படி மெத்தூசலா தான் மிகவும் நீண்ட காலம் வாழ்ந்தவன். அவன் **969** ஆண்டுகள் உயிர் வாழ்ந்தான். அவன் அந்த ஆயிரம் ஆண்டுகள் உயிர் வாழவில்லை. ஆனால் மனிதன் தண்டனைக்கான கிரயம் செலுத்தப்பட்டாகி விட்டது என்பதைக் காண்பிக்க, ஆயிரம் வருட அரசாட்சியின் போது, ஆயிரம் ஆண்டு காலம் உயிர் வாழ்வான். மனிதன் அப்பொழுது என்றென்றைக்கும் உயிர் வாழ்வான்; நாள் என்பது முடிவடைந்திருக்கும்; காலம் என்பது முடிவடைந்திருக்கும்; அவர்கள் நித்தியத்தில் இருப்பார்கள்.

**191.** இரண்டு மூன்று ஞாயிற்றுக் கிழமைகளுக்கு முன்பு நான் அளித்த 'பரலோக மணவாளன் மற்றும் பூலோக

*மணவாட்டியின் வருங்கால இருப்பிடம்' என்னும் செய்தியின் பேரில் எனக்கு பல கடிதங்கள் வந்துள்ளன. அது நிச்சயம் அநே கருக்கு பாதிப்பை உண்டு பண்ணியுள்ளது... எனக்கும் கூட. அதிலிருந்து நான் மீள வில்லை.*

***192.*** *இப்பொழுது கவனியுங்கள். இதன் பேரில் (பாருங்கள்?) ஆபிரகாம் கண்டான். இப்பொழுது, அவர் ஆபிரகாமுடன் ஈடு பட்ட விதமாக, அவனுடைய சந்ததியுடனும் ஈடுபட வேண்டும். இப்பொழுது, இந்நாட் களில் ஒன்றில், நான் எப்பொழுதாகிலும் திரும்பி வரும்போது, அதை இன்னும் விரி வாக எடுத்து, ஆபிரகாமின் வாழ்க்கையில் இருந்த வெவ்வேறு கட்டங்களை உங்க ளுக்குக் காண்பிக்க விரும்புகிறேன். அவர் ஆபிரகாமுடன் ஈடுபட்ட விதமாகவே, லூத்த ருடனும், வெஸ்லியுடனும், வழிவழியாக இக் காலம்வரையிலும் உண்டாயிருந்த சபைக ளுடன் ஈடுபட்டிருக்கிறார். அவர் எவ்வாறு*

ஆபிரகாமுக்குப் பிரத்தியட்சமானார்; எவ்வாறு சிந்தப்பட்ட இரத்தத்தின் கீழ் அவர் அவனுடன் உடன்படிக்கையை உறுதிப்படுத்திக் கொண்டார் - அது பிலதெல்பியா சபையின் காலம். ஆம், ஐயா, அது இரத்தத்தின் காலம் - வெஸ்லியன் காலம்.

***193.*** அதன் பிறகு பெந்தெகொஸ்தே காலத்தை கவனியுங்கள். அவர் அங்கு வந்த பிறகு, அவர் எல்ஷடாய் அதாவது "என் மார்பகத்தின் பாலைக் குடி" என்னும் வாக்குத்தத்தத்தை அருளினார். கேள்வி என்னவெனில்: உன்னால் பாலைக் குடிக்க முடியுமா? அது பெந்தெகொஸ்தேயினருக்கு முன்பாக வைக்கப்பட்டது. பாருங்கள்? உன்னால் பாலைக் குடிக்க முடியுமா? அவர்கள் அதைச் செய்யவில்லை; அவர்கள் வெளி வந்த ஸ்தாபனத்தின் மார்பகத்தைப் பிடித்து அதன் பாலைக் குடித்தனர். ஆனால் வித்தோ, உண்மையான வித்தோ, தேவனுடைய மார்பகத்தின் பாலைக் குடிக்கும்.

*194. அத்தனை ஆண்டுகளாக அவர்கள் காத்திருந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன் வருவதற்கு முன்பு அவர்கள் பெற்றுக் கொண்ட கடைசி அடையாளம் என்ன? தேவன் ஒரு மனித உருவில் அங்கு நின்று கொண்டு சாராளின் இருதயத்திலுள்ள சிந்தனைகளைப் பகுத்தறிந்தாரா? (சாராள் சபையாக, சபைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறாள்) அவருக்குப் பின்னால் இருந்த சபையின் சிந்தனைகளை அவர் பகுத்தறிந் தார். அது சரியா? அதற்கு பின்பு உடனே, சாராள் ஒரு வாலிப ஸ்திரீயாகவும், ஆபிர காம் ஒரு வாலிபனாகவும் மாறினான்; வாக் குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனாகிய ஈசாக்கு காட்சியில் கொண்டு வரப்பட்டான்.*

*195.* **எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு சபைக்கு நிகழ வேண்டிய கடைசி காரி யத்தை நீங்கள் கண்டு கொண்டிருக்கிறீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அது**

**முற்றிலும் உண்மை. அதை நான் விசுவாசிக்கிறேன். மாரி முடிந்து விட்டது.**

*வெளிப்படுத்தின விசேஷம் முதல் மூன்று அதிகாரங்களைப் படியுங்கள், சபைக்கு என்ன வாக்களிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் காண்பீர்கள். அதுதான் சபைக்கு அங்கே வாக்களிக்கப்பட்டுள்ளது - சபை காலங்களுக்கு.*

***196.*** *அன்றொரு நாள் நாம் எக்காளங்களைப் பிரசங்கிக்கத் தொடங்கின போது, பரிசுத்த ஆவியானவர், "அது இதைச்சேர்ந்ததல்ல" என்று உரைத்ததை நீங்கள் கவனித்தீர்கள். பாருங்கள், பாருங்கள்?*

***197.*** *இப்பொழுது, பின்மாரி, **144,000** யூதர்கள், இல்லை, அதுவல்ல, அவர்கள் மாட்டார்கள். அது எலியாவும் மோசேயும் வரும் போது... அப்பொழுதுதான் அற்புதங்கள் நடக்கும். ஜனங்கள் - பெந்தெகொஸ்தேயினர் - எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்*

*அற்புதங்கள், அவர்கள் கீழ் தான் நடக்கும். பாருங்கள், அது எலியாவினுடையதும், மோசேயினுடையதும். அவர்கள் தங்களுக்கு வேண்டும் போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளால் வாதிப்பார்கள்; அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லி வருகிற நாளிலே மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைப் பார்கள். தேவன் முன்பு செய்தது போல, நின்று கொண்டு அவர்களுக்காக யுத்தம் பண்ணுவார். அவர் எகிப்தில் செய்த வித மாகவே, அவர்களை பலத்த கரத்தினால் உலகத்தின் "தத்துவங்களிலிருந்து" (isms) வெளியே கொண்டு வருவார். அவர் அதைச் செய்வார், ஆனால் அதுவல்ல...*

***198.*** **நாம் கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்க மட்டும் செய்ய வேண்டும்.**

**காத்திருக்க மட்டும் செய்யுங்கள்; உங்கள் தீவட்டிகளை சுத்தம் பண்ணி**

**வைத்திருங்கள், அதை எண்ணெயினால் முழுவதும் நிரப்புங்கள்.**

**ஒவ்வொரு மணி நேரமும் ஜெபித்துக் கொண்டிருங்கள், ஒவ்வொரு நாளும் அல்ல, ஒவ்வொரு மணி நேரமும்.**

**உங்களை ஆயத்தமாக வைத்திருங்கள்; ஆயத்தமாயிருங்கள்: இனிமையாயிருங்கள், விழித்துக் காத்திருங்கள்...**

*ஓ, அந்த மகிழ்ச்சியான ஆயிரம் வருட அரசாட்சியின் நாள் வரக் காத்திருக்கிறோம் அப்பொழுது, நமது ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தர் வந்து காத்திருக்கும் தம் மணவாட்டியை எடுத்துக்கொள்வார் ஓ, என்னே - ஓ, நான் உழைத்து, விழித்து, ஜெபித்துக் கொண்டிருக்கையில் என் இருதயம் மகிழ்ச்சியினால் பொங்குகிறது, ஏனெனில் நமதாண்டவர் மறுபடியும் பூமிக்கு வருகிறார். அதுதான்; அதுதான் இந்நேரத்தில் சபையின் நம்பிக்கை.*




மகத்தான அற்புதங்களை செய்து
காண்பிக்கும் ஒரு ஊழியம்
உண்டாயிருக்கும் (யோவேல் அப்படி
கூறியிருக்கிறான்), ஆனால் மீட்பிற்கு
சமயமிராது
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்

***107.*** *என்ன சம்பவித்தது என்பதை இப்பொழுது கவனியுங்கள்.*

*அந்தத் தீர்க்கதரிசிகள் அவர்கள் நாட்களிலிருந்த பெண்களைக் கடிந்து கொண்டு, பெண்களை வெறுப்பவர்கள் என்று அழைக்கப்பட்டனர். அது உண்மை என்று சரித்திரம் நிரூபிக்கின் றது.*

*ஒரு நிமிடம் பொறுங்கள். வேத வாக்கியங்களைக் குறித்துக் கொண்டிருப் பவர்களே, 1 தீமோத்தேயு 5:6-ஐ குறித்துக் கொள்ள விரும்புகிறீர்களா?*

வேதம், "சுகபோகமாய் வாழ்கிற வள்..." (அது தேவனுக்குப் பிரியமான வைகளாய் இருக்கமுடியாது. எனவே அது...) "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" என்று வேதம் கூறுகின்றது.

தீர்க்கதரிசியாகிய பரி.பவுல் அதைத் தான் சொன்னான். இந்த உலகப்பிரகார மான நிலையில் வாழ்கின்ற ஸ்திரீ, உயி ரோடிருக்கும் போதே செத்தவள்.

**அவள் இரக்கத்தைப் புறக்கணித் தால் அவள் பிரிக்கும் கோட்டைத் தாண்டி, அவளுக்கு ஒரு ஸ்தலமும் இல்லாத இடத்திற்குச் சென்றுவிடுவாள்.**

அப்படியானால் அவள் வர்ணம் தீட்டிய கண்களுடனும், கத்தரிக்கப் பட்ட தலைமயிருடனும் எங்கிருப்பாள்?

*திரும்பிவர வழியில்லாத நிலைக்கு அவள் கோட்டை கடந்து சென்றுவிடுகிறாள்.*

**அவளுக்கு பிரசங்கிக்கப்பட ஒரு ஊழியம் இருந்தே ஆகவேண்டும். ஆனால் அந்த சமயத்தில் எல்லாமே முடிந்து போயிருக்கும் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்.** *அது செய்யப்பட்டுவிட்டது - அது அவர்களை சுற்றி சுற்றி வட்டமிட்டுக் கொண்டேயிருக்கிறது.*

*108.* **மகத்தான அற்புதங்களை செய்து காண்பிக்கும் ஒரு ஊழியம் உண்டாயிருக்கும் (யோவேல் அப்படி கூறியிருக்கிறான்), ஆனால் மீட்பிற்கு சமயமிராது.** *எல்லாமே முடிந்துவிட்டது. ஆட்டுக்குட்டியானவர் தமது புத்தகத்தை கையிலெடுத்தார், அவரால் மீட்கப்பட*

வேண்டியவர்கள் முடிந்துவிட்டனர். இயேசு முதலில் பிரசங்கித்து, புறக்கணிக் கப்பட்டு, அதன்பின்பு காவலிலுள்ளவர் களுக்கு ஆவியில் பிரசங்கித்தது போல. அவர்கள் மீட்கப்படமுடியாது - இரட் சிக்கப்படுவதற்கு நேரமில்லை.

**அதே ஊழியம் மீண்டும் நடக்க வேண்டும்.** அது ஒருக்கால் மூன்றாம் இழுப்பாக இருக்குமானால்? - நித்திய மாக இழக்கப்பட்டவர்களுக்கு. அப்படி இருக்குமானால்? அது அப்படியல்ல என்று நம்புகிறேன். அப்படியிருந்தால்? அதைக் குறித்து ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். அப்படியிருந்தால்? அப்படி யில்லாமலிருக்க தேவன் செய்வாராக. எனக்கும் பிள்ளைகள் இருக்கின்றனர்.

ஆனால் அது அருகாமையில் உள்ளதாக நிச்சயமாகத் தோன்றுகிறது.




இந்த ஐக்கியத்தில் சேராத அனைவரும் துன்புறுத்தப்படுவார்கள் – அவர்களைப் பகிஷ்காரம் செய்வார்கள். அப்பொழுது மிகவும் தாமதமாகியிருக்கும்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-06-30M மூன்றாம் யாத்திரை

*149.* *புதிதாக நியமிக்கப்பட்ட போப் பாண்டவர் என்ன சொல்கிறார்? - அவர் மனதில் நான்கு காரியங்கள் உள்ளன. அவைகளில் ஒன்று கத்தோலிக்கரையும் பிராடெஸ்டெண்டுகளையும் ஒருங்கே இணைப்பதாகும். மனித அறிவு கொண்டு நோக்கும் யாருக்கும் இது சரியென்று தென்படும். ஆனால் வேதப் பிரகாரம் இது தவறு. ஆனால் அது சம்பவிக்குமென்று வேதம் கூறுகின்றது. இன்னும் சற்று பார்ப்போம்.*

*150.* *எகிப்தில் ராமசேஸ் வளர்ந்து வந்தான். அவனுடைய ஆதிக்கமும்*

வளர்ந்து வந்தது. மாம்சப்பிரகாரமான ராம்சேஸ் வளர்ந்து வந்தான், அது போன்று மாம்சப்பிரகாரமான மனிதன், அந்திக் கிறிஸ்து, அரசியலின் மூலம் வளர்ந்து வருகிறான். அவன் ஏற்கனவே 'வெள்ளை மாளிகையில்' நுழைந்து விட்டான்.

மார்க்க சம்பந்தமான விஷயங்களில் அவன் ஜனங்களை குழப்பியுள்ளதன் காரணத்தால், அவர்களனைவரும் அதை ஏற்றுக் கொள்வார்கள். தேசத்திலுள்ள ஒவ்வொரு ஸ்தாபனமும் சபைகளின் குழுவில் *(Confederation of Churches)* அங்கத்தினராகி விட்டது. ராமசேஸ் வளர்ந்து வருகிறான். அவர்களெல்லாரும் ஒன்று சேருகின்றனர். பின்பு அது என்ன

*செய்கின்றது? அது ஒரு ஆதிக்கத்தை பிறப்பிக்கின்றது - முதலாவது தோன்றின மிருகத்தைப்போல்.*

*151.* **இந்த ஐக்கியத்தில் சேராத அனைவரும் துன்புறுத்தப்படுவார்கள் - அவர்களைப் பகிஷ்காரம் செய்வார்கள். அப்பொழுது மிகவும் தாமதமாகியிருக்கும். ஏனெனில் அதில் சேர்ந்தவர் அனைவரும் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்கின்றனர் "அப்பொழுது நான் வெளியே வருவேன்" என்று சொல்ல வேண்டாம். அதை இப்பொழுதே செய்யுங்கள்.** *ராமசேஸ் வளர்ந்து கொண்டிருந்தான்.*

*152. ராமசேஸ் எகிப்தில் ஆதிக் கத்தில் வளர்ந்துகொண்டு வந்த அதே*

*சமயத்தில், கர்த்தர் மோசேயை வனாந்தரத்தில் வைத்திருந்தார். அவனும் வளர்ந்துகொண்டு வந்தான். ராமசேஸுக்கு அரசியல் ஆதிக்கம் இருந்தது. ஆனால் தேவன் மோசேயை ஆவிக்குரிய முறையில் வளர்த்து, அங்கிருந்து புறப்பட்டு வந்து இஸ்ரவேல் ஜனங்களுடன் பேசுவதற்காக அவனை ஆயத்தப்படுத்தினார். அவர்களிருவரும் ஒரே நேரத்தில் வளர்ந்து வந்தனர். ஒருநாளில் இவ்விருவரிடையே பலப்பரீட்சை (Showdown) உண்டாகும். அது வெகுதூரத்திலில்லை.*

*153. "இயற்கை சம்பவங்கள் ஆவிக்குரிய சம்பவங்களுக்கு முன்னடையாளமாயுள்ளன" என்று வேதம் கூறுகின்றது. அதிலிருந்து நீங்கள் தப்பமுடியாது. உங்கள் கண்களுக்கு முன்பாகவே அது*

நிறைவேறி வருகின்றது. அது உண்மை. உண்மையான சபை வெளியே அழைக் கப்பட்டு வல்லமையைப் பெறுவதைப் பாருங்கள். பரிசுத்த ஆவியானவர் இறங்கி வருகிறார். தேவனுடைய இரகசி யங்கள் வெளியாக்கப்பட்டு ஒழுங்காகின் றன. உண்மையான சபை - ஸ்தாபனங் களல்ல. அவள் ஏற்கெனவே வெள்ளை மாளிகையில் இருக்கிறாள்; ஒன்றாக இணையத் தொடங்கி எமோரியரின் அக்கிரமங்களின் கட்டுகளினின்று வெளி யேறுகின்றது - ஜனங்கள் சுயாதீனம் பெறுகின்றனர்.

# என்றாவது ஒரு நாள் கிறிஸ்துவின் உண்மையான மணவாட்டி தேவ வார்த்தையைப் பிரசங்கிப்பதற்கு தடை செய்யப்படுவாள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-03-18E உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #2

303. **என்றாவது ஒரு நாள் கிறிஸ்துவின் உண்மையான மணவாட்டி தேவ வார்த்தையைப் பிரசங்கிப்பதற்கு தடை செய்யப்படுவாள்.**

(நீங்கள் குறித்துக்கொள்ள விரும்பினால்,) வெளி: 13:16ல் வேதம் அதைக் குறித்து தீர்க்கதரிசனமாயுரைக்கிறது.

**ஸ்தாபனங்கள் மணவாட்டியை தடை செய்யும்; அல்லது, "மிருகத்தின் முத்திரையை" அணிந்துகொள்ள வற்புறுத்தும்.**

அப்பொழுது தான் ஆட்டுக்குட்டியான வர் மணவாட்டியை எடுத்துக்கொள்வார். பின்பு வேசியை நியாயந்தீர்ப்பார்.



ஆகவே அந்த சபையானது, “போதுமான அளவுதான் எங்களிடம் உள்ளது, அப்படியானால் நீங்கள் சென்று ஜெபியுங்கள்” என்று கூறினது. ஆனால் அப்பொழுது மிகவும் காலதாமதமாகி விட்டிருந்தது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-01-03E கேள்விகளும் பதில்களும் COD #3

அவர் "இந்த கன்னிகைகள் வந்து, 'உங்கள் எண்ணெயில் எங்களுக்கு கொஞ்சங்கொடுங்கள்' என்றார்கள்" என்று கூறினார்.

"மணவாளன் வருகின்றார்!" என்கின்ற சத்தம் புறப்பட்டுச் சென்றது, "இதோ மணவாளன் வருகின்றார். அவரை சந்திக்கத்தக்கதாக அவருக்கு எதிர் கொண்டுப் போகப் புறப்படுங்கள்".

ஆகவே இந்த கன்னிகைகள், கன்னிகைகள் என்றால் யார், பரிசுத்தமான

வர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் (அதைக் குறித்து சிந்தியுங்கள்), பரிசுத்த மானவர்கள், பரிசுத்த ஆவியின் அபிஷே கம் இல்லாமல் பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்கள், அவர்கள், "எங்களுக்கு எண் ணெயைக் கொடுங்கள்" என்று கூறினார் கள்.

**76.** ஆகவே அந்த சபையானது, "போதுமான அளவுதான் எங்களிடம் உள்ளது, அப்படியானால் நீங்கள் சென்று ஜெபியுங்கள்" என்று கூறினது. ஆனால் அப்பொழுது மிகவும் கால தாமதமாகி விட்டிருந்தது. ஆகவே, அந்த சபை கலியாணத்திற்குள் சென்றது, இந்த மற்றவர்கள் புறம்பான இருளுக்குள் தள்ளப்பட்டனர் (அது சரியா?) அங்கே

அழுகையும், கூக்குரலும் பற்கடிப்பும் இருந்தது; ஆகவே அவர்கள் உபத்திரவத்திற்குள் சென்று, அவதிப்பட்டு, மரித்தனர்.

**77.** இயேசு பூமிக்கு திரும்பி வந்தார். அவருடன் ஆயிரம் வருடங்கள், ஆயிர வருட அரசாட்சி துவங்கினது. நீதியுள்ளவர்களும் அநீதியுள்ளவர்களும் வந்தனர். அவர்கள் ஒவ்வொரு மனிதனையும் நியாயத்தீர்த்தனர். ஒரு பக்கம் வெள்ளாடுகளும் மறுபக்கம் செம்மறியாடுகளும் இருந்தன. பிறகு தேவன் வந்து பூமியின் விசாலத்திலிருந்து, கூடார சந்திப்பிற்காக சபையை மேலே எடுக்கின்றார், அங்கே நம்முடைய அருமையானவர்களுடன் நாம் ஒன்று கூடு

வோம். பாருங்கள்? அங்கேதான் அந்த வித்தியாசம் உள்ளது.

78. இப்பொழுது இங்கேயிருக்கின்ற இந்த ஜனங்கள்... நாம் மரிக்கையில், நாம் இயேசு கிறிஸ்துவுக்குள் இருப்போமானால், மறுகரையில் நிச்சயமாக கிறிஸ்து இயேசுவாகிய அந்த மகத்தான சரீரத்துடன் இருக்கத்தக்கதாக நாம் செல்வோம். நாம் பாவிகளாக இருப்போமானால், அவிசுவாசிகள் என்னும் பெரிய சரீரத்துடன் இருக்கத்தக்கதாக நாம் செல்வோம்; நம்முடைய பங்கு அங்கே நரகத்தில் மாய்மாலக்காரரர்கள் இன்னும் மற்றவர்களுடன் இருக்கும் என்றும் தேவன் கூறியுள்ளார். ஆமென்!

**நண்பர்களே, அமெரிக்காவுங்கூட அதை செய்யப்போகின்றது. ஒரு நாளில் அவர்கள் நோக்கிப் பார்த்து, “உண்மையாகவே அது தேவகுமாரன்” என்று சொல்லப்போகிறார்கள். ஆனால் அது காலம் கடந்ததாயிருக்கும்**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 64-01-22 இயேசுவை நோக்கிப் பார்த்தல்

*126. அந்த நேரம் போர்ச்சேவகன் ஒரு சமயம், அவரை சிலுவையிலறையும்போது, ஒரு பார்வை பார்த்தான், அவர் என்ன செய்தார் என்பதை காணும்படியாய் பார்த்தான். ஆனால் அது காலம் கடந்ததாயிருந்தது.*

*127.* **நண்பர்களே, அமெரிக்காவும் கூட அதை செய்யப் போகின்றது. ஒரு நாளில் அவர்கள் நோக்கிப் பார்த்து, "உண்மையாகவே அது தேவகுமாரன்" என்று சொல்லப் போகிறார்கள். ஆனால் அது காலம் கடந்ததாயிருக்கும். கடைசி**

**முறையாக அவர்கள் சிரித்து பரிகசித்தார்கள்.**

*128.* எந்த இடத்தில் அவன் இரட்சிக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதை மட்டுந்தான் அவனால் நோக்கி அப்போது பார்க்கமுடியும். ஆனால் அவ்வமயம் அது மிகவும் காலம் கடந்ததாயிருக்கும். ஜீவனின் அதிபதியை அவன் சிலுவையிலறைந்தான்.

*129.* அவர்கள் மத்தியிலேயே சரியாக அவர் யாரென்று தெளிவாக ரூபகாரப்படுத்திக் காணும்போதே, இன்றைக்கு, அநேக சமயங்களில் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை அவர்களுடைய இருதயங்களிலிருந்து தள்ளிப்போடுகிறார்கள். ஆம் ஐயா.

நினைவிருக்கட்டும், தேவனுடைய தீர்க்கதரிசி என்ற முறையில் நான் இதை கூறுகிறேன். “அணுகுண்டு போன்ற ஏதோ ஒரு காரியத்தை ருஷியாவானது வாடிகன் மேல் போட்டு ஒரு மணி நேரத்தில் அழித்து விடுமென்று” கர்த்தர் உரைக்கிறார்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-05-13 மிருகத்தின் முத்திரை

137. நீங்கள், எனக்கு இன்னும் ஒரு நாள் தருவீர்களானால், தேவன் தருவாரானால் ரோமாபுரியை அழிக்கத்தக்கதான கம்யூனிஸமானது சர்வவல்லவரின் கரங்களில் இருப்பதை நேராக நிரூபிப்பேன்.

**நினைவிருக்கட்டும், தேவனுடைய தீர்க்கதரிசி என்ற முறையில் நான் இதை கூறுகிறேன். "அணுகுண்டு போன்ற ஏதோ ஒரு காரியத்தை ருஷியாவானது வாடிகன் மேல் போட்டு ஒரு மணி நேரத்தில் அழித்து விடுமென்று" கர்த்தர் உரைக்கிறார்.**

கொடூர இருதயமுள்ள மனிதர்களை தேவன் எடுத்து அவர்களை அவருடைய கரத்தில் வைத்துக்கொண்டார்.

அவருடைய சித்தத்தை நிறைவேற்ற, அவர்களுக்கு நேரிட வேண்டியதை சரி யாக அப்படியே நிறைவேற்ற அவர்கள் அவருடைய கரத்தில் அவருடைய கருவி களாக இருக்கின்றார்கள். சரியா அப்படியே தான் அதுதான் வார்த்தை.

ருஷியா கம்யூனிஸம் - ஒன்றையும் ஜெயிக்கப்போவதில்லை. தேவனுடைய வார்த்தை ஒருபோதும் தவறாக முடியாது. ரோம மார்க்கமே உலகத்தை ஜெயிக்கப்போகின்றது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 62-03-11 இதுவரை சண்டையிட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம்

180. ருஷியாவில்... இதை இராணுவத்தில் பணிபுரிந்தவர்களிடம் நன்மைக்காகவும், வேத மாணாக்கராகிய உங்களுக்கும் கூறுகிறேன். நீங்கள் ஏன் ருஷியாவைக் குறித்து சந்தடி செய்தும், சத்தமிட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள்? குண்டு போடப்பட்டால், அதற்கான பாதுகாப்பிடம் ஒன்றை நீங்கள் கட்டவேண்டும் என்று நான் கூற நீங்கள் கேட்டதில்லை. **நீங்கள் ஏன் ருஷியாவைக் குறித்து சந்தடி செய்கிறீர்கள்? ருஷியா ஒன்றுமில்லை. அது யுத்தங்கள் ஒன்றும் ஜெயிக்கப்போவ**

**தில்லை. அவர்கள் உலகத்தை ஜெயிக்க போவதில்லை. கம்யூனிசம் உலகத்தை ஜெயிக்கப் போவதில்லை. ஜனங்களுக்கு என்ன நேர்ந்தது? தேவனுடைய வார்த்தை தவறாகுமா?**

கவனியுங்கள், இது ஒலிநாடாவில் பதிவு செய்யப்படுகின்றது. நான் இப்பொழுது உலகத்திற்கு அல்லது இந்த ஒலி நாடாக்கள் எங்கெல்லாம் செல்கின்றனவோ. பேசிக்கொண்டிருக்கிறேன்; இங்குள்ள ஜனங்களாகிய நீங்கள், எனக்கு என்ன நேர்ந்தாலும் இதை நம்புங்கள். **ருஷியா கம்யூனிஸம் - ஒன்றையும் ஜெயிக்கப்போவதில்லை. தேவனுடைய வார்த்தை ஒருபோதும் தவறாக முடியாது. ரோம மார்க்கமே உலகத்தை ஜெயிக்கப்போகின்றது.**

181. நாம் தானியேலின் தரிசனத்தை எடுத்துக்கொள்வோம். அது தேவனுடைய வார்த்தை. தானியேலாகிய நீ - ராஜா வாகிய நேபுகாத்நேச்சாராகிய நீர் இந்த பொன் தலை - பாபிலோன். உமக்கு பின்பு வேறொரு ராஜ்யம் எழும்பும். அது வெள்ளி (பாருங்கள்?) அது தான் மேதிய - பெர்சிய ராஜ்யம். வேறொன்று கிரேக்க சாம்ராஜ்யம் மகா அலெக்சாண்டர். அடுத்து வருவது ரோமாபுரி" கம்யூனிஸத் தைக் குறித்து அங்கு ஒன்றுமே சொல்லப் படவில்லை. ரோமாபுரி உலகத்தை வென் றது.

இயேசு கிறிஸ்து ரோம சாம்ராஜ்யத்தின் ஆளுகையின்போது பிறந்து, துன்புறுத்தப் பட்டார். அவர் முதலாவதாக ரோம சாம் ராஜ்யத்தின் ஆளுகையின்போது தோன்றி னார். அவர் வரப்போகும் அவருடைய

இரண்டாம் வருகையின் இந்நேரத்தில், அவருடைய செய்தியானது எல்லாவற் றிற்கும் தாயான ரோம ஸ்தாபனத்தால் துன்புறுத்தப்படுகிறது. அவர் திரும்பிவரும் போது, ரோம சாம்ராஜ்யத்தை அடியோடு ஒழிப்பார். அவர் வந்து ரோம சாம்ராஜ் யத்தை ஒழிப்பார் என்று யூதர்கள் எப் பொழுதுமே எதிர்நோக்கியிருந்தனர் கத் தோலிக்க குருக்களாட்சி (heirarchy) உலகத் திலுள்ள எல்லா ஸ்தாபனங்களோ டும் இப்பொழுது ஒன்றாக இணைந்து, சபை களின் சங்கமாக (confederation of churches) தங்களை ஸ்தாபித்துக் கொண் டுள்ளன எனவே கர்த்தர் உரைக்கிறதாவது, அது ருஷியாவல்ல, அது ரோமாபுரி.

182. **ரோமாபுரியைத் தவிர கம்யூனி ஸமோ அல்லது வேறெதாவது ஒன்று ஆளுகைசெய்யும் என்பதற்கு ஒரு வேத**

## வாக்கியத்தையாவது ஆதாரமாகக் காட்டுங்கள் பார்க்கலாம் !

நேபுகாத்நேச்சாருக்குப் பின்பு மேதிய - பெர்சியர் எழும்பினார்களா? நிச்சயமாக. கிரேக்க சாம்ராஜ்யம் அதற்கு பின்பு தோன்றினதா? நிச்சயமாக. ஆம்! அங்கிருந்து ரோமாபுரி ஆட்சிக்கு வந்ததா? இன்று நம்மிடையே காணப்படுவது போன்று, அது பத்து ஆட்டோமோன் (ottomon) அரசுகளாக உடைந்ததா? இரும்பு என்று அர்த்தம் கொள்ளும் பெயருடைய ஐசன்ஹவரும், களிமண் என்று அர்த்தம் கொள்ளும் பெயருடைய க்ருஷேவும் இங்கு சந்தித்தனரா? க்ருஷேவ் தன் காலணியைக் கழற்றி, (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டுகிறார் - ஆசி) அதை வெளிப்படையான செயலாக்கி, ஜனங்களுக்குக் காண்

பிக்க மேசையின் மேல் இப்படி அதை அடித்தாரா? (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தின் மேல் அடித்துக் காண்பிக்கிறார் - ஆசி). சரி, ஜனங்களுக்கு இன்று என்ன நேர்ந்துள்ளது?

183. விசுவாசம் இன்று எங்கு சென்றுள்ளது? நீங்கள் ஏன் தேவனுடைய வார்த்தை சத்தியமென்று விசுவாசிக்கக் கூடாது? இன்றைய போதகர்களுக்கு என்ன நேர்ந்தது? ஒவ்வொரு போதகரும் கம்யூனிஸத்தை எதிர்த்து போராடுகின்றார். கம்யூனிஸம் ஒன்றுமில்லை! பிசாசு உங்கள் முன்னிலையில் ஒன்றை கட்டிக்கொண்டு வருகிறான். அதை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். அது ரோம மார்க்கம், ஸ்தாபன மார்க்கம். ரோம் மார்க்கமே எல்லா ஸ்தாபனங்களுக்கும் தாய். வேதம் அவளை வேசியென்றும், ஸ்தாபனங்களை

தேவனுடைய வார்த்தைக்கு விரோத மாயுள்ள வேசியின் குமாரத்திகள் என்றும் அழைக்கிறது. வீரர்களே, வார்த்தையை கையிலெடுத்துக்கொள்ளுங்கள்... வார்த் தையில் நிலைத்திருங்கள்.

**ஒரு நாள் நான் அழிந்து போவேன், ஆனால் இந்த வார்த்தையோ ஒருக்காலும் அழிந்துபோகாது. வாலிபப் பிள்ளைகளே, என் சந்ததியில் இது நடக்காவிட்டால், நீங்கள் அதைக் காண்பீர்கள்.**

184. இன்று காலை வானொலி செய் தியைக் கேட்டீர்களா? திருமதி கென்னடி போப்பாண்டவரைக் காணச் சென்றதும், போப்பாண்டவர் என்ன சொன்னார் என்றும் கேட்டீர்களா? பாருங்கள்? உலகி லுள்ள எல்லா மதங்களுமே? ஞாயிறன்று இதைக் குறித்து சற்று அதிகம் பேசலாம்.

185. **பாருங்கள்? ருஷியாவைக் குறித்து கவலை கொள்ளாதீர்கள். ருஷியா கடற்கரையிலுள்ள ஒரு சிறு கூழாங்கல். கம்யூனிஸத்தைக் குறித்து கவலை கொள் ளாதீர்கள். ரோம் மார்க்கம் மற்ற சபை களுடன் ஒன்றாக இணையும்போது, அதை கவனித்து வாருங்கள். கம்யூனிஸம் உல கத்தை ஆளும் என்று வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. மற்றவை எந்த வழி யாக சென்றாலும், நான் வார்த்தையின் வழியே செல்கிறேன். நான் வார்த்தையை விசுவாசிக்கிறேன்.**

**ரோம்மார்க்கம் தான் உலகத்தை கைப் பற்றும், ரோம்மார்க்கம் எல்லா ஸ்தாபனங் களுக்கும் தாய். ரோம மார்க்கம் தோன்று வதற்கு முன்பு ஒரு ஸ்தாபனமும் இருந்த தில்லை. நீங்கள் ஒவ்வொருவரும் அவளை விட்டு வெளியே வரவேண்டுமென்று**

வேதம் கூறுகின்றது. அவள் வேசிகளுக் குத் தாய் !



# கவனியுங்கள் கம்யூனிஸம் ரோமாபுரியை சுட்டெரிக்கும் என்று கூறினேன்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-12-30M முற்றிலுமானவர்

83. இங்கேயுள்ள முன் காலத்தவர் களுக்கு, ராய் ஸ்லாட்டர் போன்ற பழங் காலத்தவர்களுக்கு நினைவிருக்கும். நான் அப்போது ஒரு தீர்க்கதரிசனம் கூறினது ஞாபகமிருக்கும். 'ஆட் ஃபெல்லோஸ் பில்டிங்' (Odd Fellow's Building) என்ற இடத்தில் அதாவது நாம் இங்கே வருவ தற்கு முன்பாக இருந்த இடத்தில், நான் கூறினேன். ''முசோலினி அவமானகரமான முடிவை அடைவான்“ மேலும் நான், ”அவனது முதலாவது படையெடுப்பில், அவன் எத்தியோப்பியாவுக்குப் போவான், எத்தியோப்பியா அவனது காலடியில் விழும். அவனுக்கு ஒருவரும் உதவி செய்ய மாட்டார்கள். கனவீனத்தோடு

அவன் அடக்கம் பண்ணப்படுவான்'' என்றும் கூறினேன். அவ்வாறே அவனுக்கும் நேர்ந்தது.

"நாஜிக் கொள்கை, பாஸிஸக் கொள்கை, கம்யூனிசக் கொள்கைகள்" என்று மூன்று விதமான 'இஸம்' கள் எழும்பியிருக்கின்றன. அந்த இஸம்கள் சுழன்று சேர்ந்து வந்து ஒன்றில் போய் முடியும். அதுதான் கம்யூனிஸமாக இருக்கும். **கவனியுங்கள் கம்யூனிஸம் ரோமாபுரியை சுட்டெரிக்கும் என்று கூறினேன்.** பார்த்தீர்களா? அதை நீங்கள் கவனியுங்கள். அது தேவனுடைய கரங்களில் ஒரு கருவியாக உள்ளது. கம்யூனிஸம் தேவனுக்கெதிரானது என்று அவர்கள் கருதுகிறார்கள். எனவே அதற்கெதிராக எப்போதும் கிரியை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அது என்னவென்று தெரிய

வில்லை. அவர் நெபுகாத்நேச்சார், இன்னும் வேறு அநேகரை எவ்வாறு உபயோகித்தாரோ, அதே போல் தமது கையில் ஒரு கருவியாகத்தான் அவர்களையும் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்.



Bro. Branham:

~~~~~~

உபத்திரவங்கள் நம்மை பொறுமைசாலிகளாக்குகிறது. அது நம்மை தேவனுடைய வருகைக்கு காத்திருக்கச் செய்கிறது.

~~~~~~

செய்தி: யூபிலி ஆண்டு, 54-1003E



Bro. Branham

~~~~~~~~

அன்பான நண்பர்களே, நான் உங்களுக்கு கூறுவது என்னவென்றால், முக்கியமானகாரியங்களில் தேவனுடைய சித்தத்தை அறிய வேண்டிய சிறந்த வழி ஜெபமே. பாருங்கள்?

~~~~~

செய்தி: கேள்விகளும்  பதில்களும், 61-1015 M, பத்தி எண் 163

BRO. BRANHAM:

~~~~~~~~


உன்னுடைய நேரத்தையும்
சமயத்தையும்
ஜெபத்திற்காக
தியாகம் செய். உன்னுடைய
ஜீவியத்தை தியாகம் செய்.

~~~~~~~~

எதிர்பார்ப்பு,
61-0207, பத்தி எண் E-63

# கடைசிகால தீர்க்கதரிசனங்கள்

# 7



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து